# பழங்குடியினரை ஆவணப்படுத்தல்
# **2023**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | பூர்வ குடிகள் ஆவணப்படுத்தல் (கரையோர வேடர்கள்) |
| செயற்றிட்ட எண் | NF/PG/2023/0003 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஒரு வருடம் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | NCFP Foundation |
| முக்கிய பங்குத்தாரர்கள் | Staff and Volunteers of Noolaham Foundation |
| செயற்றிட்டச் செலவுகள் | LKR 1,230,967.00 |

## செயற்றிட்ட அறிமுகம்

மனிதத் தோற்றத்தின் மாறுபட்ட சிந்தனைப் போக்குகளையும், அதன் வியாக்கியானங்களையும் விளங்கவைத்துக்கொண்டும், விளங்கிக்கொண்டும் இருக்கின்ற தற்காலத்திலே இயற்கையுடன் இணைந்ததான வாழ்வியற் கோலங்கள் பெரிதும் விரும்பப்படுகின்றன. அவ்வாறானதொரு மாளாத தன்மையில் தான் ஆதிப்பிரஜைகள் பற்றியதான எண்ணக்கருக்கள் தாராளமாக தோற்றம் பெற்று பண்பாட்டு மரபுகளுக்கமைய ஈடேற்றப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழலில் தான் ஆதிப்பிரஜைகளின் நாட்டாரியல் கூறுகளின் அனைத்து விடயம் சார்ந்தும் கவனம் செலுத்த வேண்டிய தேவை இலங்கைத் தீவிற்குமுண்டு. இலங்கையின் ஆதிக்குடிகள் வேடர் எனும் காரணப்பெயரிலேயே அடையாளம் காணப்படுகின்றனர். அவ்வகையில் இலங்கையின் பூர்வகுடிகள் வாழிடம் மற்றும் தொழில் முறைகளின் நிமித்தம் காட்டுவேடர் மற்றும் கடல் வேடர் என பிரித்தறியப்படுகின்றனர். இன்று இப்பூர்வகுடிகள் பண்பாட்டு மாறுதல்களுக்கு அமைய தமிழருடன் அண்டி வாழ்ந்ததால் தமிழ் மொழி பேசிக்கொண்டு கிழக்கு கரையோரங்களில் நீர்வழித் தொழில்களைச் செய்து கொண்டும், சிங்களவருடன் அண்டி வாழ்ந்ததால் சிங்கள மொழி பேசிக் கொண்டு மத்திய மற்றும் தென் பகுதிகளில் வனத்துடன் தொடர்புடைய தொழில்களைச் செய்து கொண்டும் வாழ்ந்து வருகின்றனர்.

காலனியச் சிலந்திச் சிக்கலுக்குள் உலகம் சிக்குக்குண்டு இயல்பனைத்தும் இழந்து கொண்டிருக்கின்ற நெருக்கடியான சூழலிற்கு இலங்கை மட்டும் விதிவிலக்கல்ல. இலங்கையில் வசிக்கின்ற அனைத்து இனக்குழுக்களைப் போலவே ஆதிப்பிரஜைகளும் தமக்கான தன்னியல்புகளைக் கொண்டு காணப்படுகின்றதன. இருந்தும் வாழ்க்கைக்கான அனைத்து தேவைகளின் நிமித்தம் உண்டாகின்ற மாறுதல்களுக்கு அமைய அந்நிய மக்களுடன் கரைந்து கொண்டு வருகின்ற இக்கட்டான சூழ்நிலையில் தான் ஆதிப்பிரஜைகள் சார்ந்த தேடல்களும், ஆவணப் படுத்தல்களும் மிகத் தேவையாக உள்ளன.

செயற்றிட்ட நோக்கம்

நாட்டின் உண்மையான ஆதிக்குடிகளையும் அவர்தம் பண்பாட்டுக்கூறுகளையும் அறிதல். அவர்தம் செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து இடமளித்தல். வெளிக்கொணரப்படாமல் இருக்கின்ற பூர்வ குடிகளின் மரபுகளையும் பண்பாட்டு அசைவுகளையும் அவர்களின் அனுமதியுடன் எந்தவித மாற்றமும் இல்லாமல் தற்காலத்திற்கு ஏற்றவாறு ஆவணப்படுத்துதல். அவர்தம் கலைகள், மரபு ரீதியான பின்பற்றுதல்கள், இயற்கையுடன் ஒன்றித்து தன்வயப்பட்ட வாழ்க்கை முறைகளை அறிதல். இலங்கைப் பரப்பில் மானுடவியல் மற்றும் நாட்டுப்புறவியல் கண்ணோட்டத்திற்கும், ஆய்வுப் பரப்பிற்கும் புதிய வழிகளையும் அணுகுமுறைகளையும் ஏற்படுத்தல் போன்றவற்றை பின்புலமாகக் கொண்டு இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

செயற்றிட்ட அடைவு மட்டம்

| செயற்பாடுகள் | இலக்கு | அடைவுமட்டம் |
|---|---|---|
| சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் | 80 | 30 |
| பதிவேற்றப்பட்ட ஆவணங்கள் | 80 | 20 |
| வாழ்க்கை வரலாறுகள் (2-5 பந்திகள்) | 60 | 33 |
| நிறுவன உள்ளீடுகள் | 12 | 17 |
| வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யட்டவை | 60 | 38 |
| வாய்மொழி வரலாற்று சந்திப்புக்கள் | 60 | 88 |
| பதிவேற்றப்பட்ட வாய்மொழி வரலாறுகள் | 60 | 42 |
| புகைப்படங்கள் | 120 | 62 |
| குறுங்கால ஆவணங்கள் | 120 | 169 |
| நிகழ்வுகளை பதிவிடல் | 24 | 2 |
| வலைப்பூக்கள் | 180 | 142 |
| அரிய ஆவணங்களை இனங்காணல் | 50 | 5 |

பழங்குடியினரை ஆவணப்படுத்தல் தொடர்பில் அடையாளங்காணப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட பிரதேசங்களின் பட்டியல்.

| மாவட்டம் | அடையாளங்காணப்பட்ட பிரதேசங்கள் | பூர்த்தி செய்யப்பட்ட இடங்கள் |
|---|---|---|
| மட்டக்களப்பு | பாட்டாளிபுரம், சந்தோச புரம், சாலையூர், கிறவல் குழி, நல்லூர், இலக்கந்தை, தங்கநகர்,வெருகல்,கல்லடி ,இலங்கைத்துறை, | களுவன்கேணி, யக்குறே, சேனைக்கண்டம், மாவடிப்பற்று, தளவாய்,வாகரை, மாங்கேணி, |

| | | |
|---|---|---|
| | இலங்கைத்துறை முகத்துவாரம் , வாழைத்தோட்டம், சூரநகர், திக்கானை | மாங்கொலணி, கிரிமிச்சை, குஞ்சன்குளம், மதுரங்குளம்,பாலர் சேனை , வேப்பவெட்டுவான், பண்டாரக்கட்டு |
| திருகோணமலை | பாட்டாளிபுரம், சந்தோச புரம், சாலையூர், கிறவல் குழி, நல்லூர், கல்லடி, இலங்கைத்துறை, இலங்கைத்துறை முகத்துவாரம் வாழைத்தோட்டம்,சூரநகர் | களுவன்கேணி, யக்குறே, சேனைக்கண்டம், மாவடிப்பற்று, தளவாய், முறுத்தானை, மினுமினுத்தவெளி, இலுக்கு, கரடியன்குளம், பாலர் சேனை , வேப்பவெட்டுவான், நாசிவன்தீவு, கருங்காலிச்சோலை, கல்மடு, பாலையடித்தோணா, வாகரை, மாங்கேணி, மாங்கொலணி, கிரிமிச்சை, குஞ்சன்குளம், மதுரங்குளம், வட்டவான், அம்மந்தனாவெளி, கழுவாக்கேணி, பால்ச்சேனை, கறுவப்பங்கேணி, பண்டாரக்கட்டு |

பழங்குடியினரை ஆவணப்படுத்தலின் கீழ் அடையாளங்காணப்பட்ட ஆளுமைகளின் விபரப்பட்டியல்.

| வகைப்பாடு | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| அண்ணாவி மற்றும் கூத்துக்கலைஞர்கள் | மட்டக்களப்பு | 02 |
| பேராசிரியர் | மட்டக்களப்பு | 02 |
| சமூக செயற்பாட்டாளர்கள் | திருகோணமலை | 05 |
| வேடக்கப்புறாளைமார் | மட்டக்களப்பு | 09 |
| மருத்துவிச்சி | மட்டக்களப்பு | 01 |
| பட்டதாரிகள் | மட்டக்களப்பு | 02 |
| நோய் நீக்குனர் | மட்டக்களப்பு | 01 |
| ஓய்வு பெற்ற அதிபர்கள் | மட்டக்களப்பு | 02 |

| | | |
|---|---|---|
| வேடர் வழிபாட்டுத்தேவாதி | மட்டக்களப்பு | 01 |
| தேன் வேட்டைக்காரர் | மட்டக்களப்பு | 01 |
| கரையோர வேடர்த்தலைவர் | மட்டக்களப்பு | 01 |
| பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் (பிற சமூகம் சார்ந்தோர்) | மட்டக்களப்பு | 02 |

பழங்குடியினரை ஆவணப்படுத்தலின் கீழ் ஆவணப்படுத்தப்பட்ட மற்றும் அமைப்புக்கள் வழிபாட்டு மையங்களின் பட்டியல். இவை ஆவணகம் சார்ந்துமட்டுமலாமல் புகைப்படமாகவும் ஆவணப்படுத்தப்படுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

| பிரதேசம் | அமைப்புக்கள் | சடங்கு மையம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | 03 | 07 | 10 |
| திருகோணமலை | 03 | 00 | 03 |

பழங்குடி மக்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஆவணகங்களும் அதன் பட்டியலும்.

| ஆவண , ஆவணக வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| நூல்கள் | 11 |
| கடிதம் | 16 |
| அறிக்கை | 04 |
| ஆய்வுக்கையேடு | 02 |
| கட்டுரை | 06 |
| மலர் | 07 |
| ஆய்வுக்கட்டுரை | 04 |
| மஹஜர் | 01 |
| ஆய்வுச்சுருக்கம் | 02 |
| அழைப்பிதழ் | 01 |
| செய்திமடல் | 01 |
| குறிப்பு | 03 |

| பழங்குடி ஆளுமைகளால் எழுதப்பட்டவை | எண்ணிக்கை |
|---|---|
| சிறுகதைத்தொகுப்பு | 01 |
| நாட்டுக்கூத்துப்பிரதி | 22 |
| வானொலி நாடகம் | 03 |
| நாட்டிய நாடகம் | 02 |
| ஆய்வுக்கட்டுரை | 12 |

பழங்குடியினரை ஆவணப்படுத்தல் தொடர்பில் பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

| நிகழ்ச்சி | பிரதேசம் |
|---|---|
| களுவன்கேணி- வேட்டுவச் சடங்கு | மட்டக்களப்பு |
| மீனாட்சிப்பத்தை-வேட்டுவச் சடங்கு | மட்டக்களப்பு |

எதிர்கொண்ட சவால்கள்

- ஏனைய கள செயற்றிட்ட முன்னெடுப்புக்களைப் போன்று குறித்த நேரத்திற்க்கான முன் தயாரிப்புக்குக்கு ஏற்றால் போல் களச்செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகக் கடினம். காரணம் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளைச் செய்கின்ற பெரும்பாலானோர் தினக்கூலிகளாகவும், முழு நேர மதகுரு மார்களாகவும் இருத்தல்.
- ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில் வாய்மொழி வரலாற்றை ஆவணப்படுத்தல் முக்கிய செயற்பாடாக காணப்படுகிறது. அவ்வாறு வாய் மொழி வரலாற்றை தெளிவாக பெற்று ஆவணப்படுத்த பொருத்தமான உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் ஒரு சவாலாக அமைந்தது.
- ஆதிப்பிரசைகளை நாடெங்கிலும் பரந்து பட்டு வாழ்கின்றனர். அந்த வகையில் அவர்களிடையே தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் இருப்பவர்களை அடையாளம் காண்பதும் அவர்கள் தொடர்பான வரலாறு மற்றும் பின்புலங்களை சரியான முறையில் ஆவணப்படுத்துவதும் சவாலாக இருந்தது.
- வேடர் சமூகத்தினருக்கென்று மொழியின் எழுத்து வடிவம் இல்லாமையினால் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட எழுத்தாவணங்களை பெறுதல் என்பது சவாலாக அமைந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஆவணப்படுத்தலுக்கு உள்வாங்கப்படுபவர்களில் பெருபாலானவர்கள் (ஆண், பெண்) வேடுவ மதகுருக்களாகக் காணப்படுவதனால், வாய்மொழி வரலாறுகளைப் பதிவு செய்யும் போது அதிமானுட நிலைக்குச் சென்று திரும்புவர்.

அதன் போது அன்றைய உரையாடலுக்கான நேரம் அதிகரிக்கப்பட வேண்டியதாக இருக்கும். ஆகவே அதை கவனத்தில் கொண்டு அடைவு மட்டத்தின் இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும்.

- ஆவணப்படுத்தப்பட வேண்டியவர்களின் களத்திற்க்கு நேரடியாகச் (சேனை வாடிகள், கடற்கரையோரங்கள், வயல் நிலங்கள்) சென்று வாய்மொழி வரலாறுகளினைப் பதிவு செய்யும் போது ஏற்படுகின்ற பின்புல ஒலிகளினால் வாய்மொழி வரலாற்றின் தரம் பாதிப்படையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆகவே அதை சரி செய்வதற்காக தேவையற்ற ஒலிகளை கட்டுப்படுத்தக்கூடிய ஒலிவாங்கியை பயன்படுத்தல் இவற்றிற்க்கு தீர்வாக அமையும்
- வேடர் சமூகம் சார்ந்து ஏனைய சமூகத்தினர் தம் மொழியில் நூல்கள், கட்டுரைகள் முதலான விடயங்களை எழுதியுள்ளனர். அவற்றையும் இச்செயற்றிட்டத்தில் இணைத்து ஆவணப்படுத்துவதன் மூலம் ஆவணப்படுத்தலுக்கான இலக்கினை அடைய முடியும்.

இச்செயற்றிட்டம் சார்ந்து அடையாளம் காணப்பட்ட, முன்னெடுக்கக்கூடிய ஏனைய அரிய ஆவணச்செயற்பாடுகள்

1.வேடர் சமூகத்தில் காணப்படும் ஆளுமைகளின் தனிப்பட்ட திறன்களான எழுத்துத்திறன், கலையாக்கத்திறன் முதலான விடயங்களை ஆவணப்படுத்தல்

2.வேடர் சமூகத்தினரின் பிரதான தொழில் நடைமுறையான தேனெடுத்தலை ஒரு தனித்த ஆவணமாகப் பதிவுசெய்தல்.

3.வேடர் சமூத்தினரிடம் தனித்துவமாகக் காணப்படும் பெண் தெய்வ வழிபாடு மற்றும் வேடர் சமூகத்தில் பெண்களின் நிலை முதலான விடயங்களை மையமாகக் கொண்ட ஒரு செயற்றிட்டத்தினை முன்னெடுத்தல்.

4.கரையோர வேடர்களிடம் காணப்படுகின்ற இசைமரபு சார்ந்த தகவல் மற்றும் அது சார் விடயங்களை ஆவணப்படுத்தல்.

முடிவுரை

இச்செயற்றிட்டம் மூலம் பழங்குடியின சமூகத்தை சார்ந்த பல ஆளுமைகளும் அச்சமூகத்தை சார்ந்த மக்களும் அடையாளங்காணப்பட்டு , அவர்களது சடங்கு மையங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் புகைப்படங்களாகவும் நிகழ்வுகளாகவும் ஆவணப்படுத்தப்பட்டு மேலுமொரு ஆய்வுக்கு உதவும் வகையில் இச்செயற்றிட்டத்தின் அடைவுமட்ட வளர்ச்சி அமைந்துள்ளது.

| ஆவணப்படுத்தப்பட்டவை | குறிப்பு | வலைத்தள இணைப்பு |
|---|---|---|
| நூல்கள் | பழங்குடி சமூகத்தினர் சார்ந்து அவர்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - ஆவணங்கள் |
| ஒளிப்படங்கள் | பழங்குடியினரின் வழிபாட்டிடம், சடங்கு மையங்கள், சடங்கிற்கான ஆயத்த வேலைகள், சடங்குப்பொருட்கள், பழங்குடியினரின் புழங்கு பொருட்கள் போன்றவற்றின் புகைப்படங்கள் | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - ஒளிப்படங்கள் |
| வாய்மொழி வரலாறுகள் | பழங்குடியின சமூகம் சார்ந்தோர், கப்புறாளைமார், சமூக செயற்பாட்டாளர்கள், நோய் குணமாக்குவோர் ஆகியோரிடம் வாய்மொழி மூலம் பதிவு செய்யப்பட்ட அவர்களது வரலாறுகள், சடங்கு முறைகள் ஆகியவை | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - வாய்மொழி வரலாறுகள் |
| நிகழ்வுகள் | பழங்குடியினரின் வழிபாட்டு முறைகளையும் வாழ்வியல் அம்சங்களையும் பிரதிபலிக்கும் விதத்தில் ஆவணப்படுத்தப்படுப வையாகும் | |
| ஆவணகங்கள் | பழங்குடியினர் சார் இயக்கங்கள் மற்றும் அவர்களது தேவைப்பாடுகள் பிரச்சனைகள் தொடர்பாக அளிக்கப்பட்ட அறிக்கைகள் , கடிதங்கள், மகஜர்கள் என்பன ஆவணகங்களாக ஆவணப்படுத்தப்பட்டுள் ளன | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - கட்டுரைகள்<br><br>பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - கையெழுத்து ஆவணகம்<br><br>பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - ஆய்வுக்கட்டுரைகள்<br><br>பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - கடிதங்கள்<br><br>அழங்குடியினரை |

| | | |
|---|---|---|
| | | ஆவணப்படுத்தல் - அறிக்கைகள் |
| ஆளுமைகள் மற்றும் நிறுவனங்கள் | பழங்குடி சமூகத்தில் உள்ள ஆளுமைகள் மற்றும் அச்சமூகம் சார்ந்த நிறுவனங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - ஆளுமைகள்<br><br>பழங்குடியினரை ஆவணப்படுத்தல் - நிறுவனங்கள் |

பின்னிணைப்பு
https://tinyurl.com/4myeyk